## செந்தமிழ்

# மழலைப் பாடல்கள்



பத்மா இளங்கோவன்

UMi
The Ultimate

செந்தமிழ்

# மழலைப் பாடல்கள்

## பத்மா இளங்கோவன்

UMi The Ultimate
Unique
Media Integrators
No.8, 6th Cross, 8th Main Road, Vaishnavi Nagar, Thirumullaivoyal,
Chennai-600 109. E-mail: umi.infobooks@gmail.com

UMi UniqueMediaIntegrators
The Ultimate
No.8, 6th Cross, 8th Main Road,
Vaishnavi Nagar, Thirumullaivoyal,
Chennai-600 109. umi.infobooks@gmail.com

---

Senthtamil Mazhalai Padalkal

This edition published and distributed by UMI

© : Author

All rights reserved except for the inclusion of brief quotations in a review, no part of this publication may be reproduced, stored in retrieval system, or transmitted in any form or by any mean, electronic, mechanical, photocopying, recording, or otherwise without the written permission of the publisher.

First Published by UMI, March, 2014

ISBN: 978-93-83051-27-4

Price : ₹ **100/-**

Text Layout &
Cover Design by: Unique Media Integrators
Chennai.
Printing and Binding:
Mani Offset. Chennai.

Unique Media Integrators and its office bearers can t be held responsible for the consequences of any actions taken as a result of information provided in this book.




# பாடிப் பழகுங்கள்

குழந்தைகளே குழந்தைகளே
ஓடி வாருங்கள்
கொஞ்சு தமிழ்ப் பாடல்களை
பாடிப் பாருங்கள்!



# அன்பே கடவுள்

அல்லா புத்தர் சிவன் யேசு
என்றே கடவுள் பல இருந்தும்
எல்லார் வழியும் ஒன்றே யாம்
அன்பே கடவுள் அறிவோம் நாம்.



## பெற்றோர்

அம்மா அப்பா அன்பு
என்றும் வேண்டும் எமக்கு
அழகாய் எம்மை வளர்க்கும்
அவர்கள் பாசம் ஒன்றே.



## வீடு

அழகிய சின்ன வீடு
அதுவே எமது கூடு
அப்பா அம்மா வோடு
அன்பாய் வாழும் வீடு.



## அம்மா

அம்மா எந்தன் அம்மா
அன்பு முத்தம் தருவா
அன்பாய் உணவு சமைத்து
அள்ளி உண்ணத் தருவா.



# அப்பா

எங்கள் அப்பா நல்லவர்
எம்மைக் காக்க உழைப்பவர்
நல்ல பழக்க வழக்கங்கள்
நமக்குச் சொல்லித் தருவார்.



## பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பொக்கை வாய்ப் பாட்டி
பாட்டும் கதையும் சொல்லும்
பாசம் உள்ள பாட்டி.



# தாத்தா

தாத்தா நல்ல தாத்தா
தடியை ஊன்றி நடப்பார்
பாப்பா என்னைத் தூக்கியே
பாட்டும் பாடிக் காட்டுவார்.



# குட்டித்தம்பி

குட்டித் தம்பி குட்டித்தம்பி
குறும்பு செய்யும் குட்டித்தம்பி
அம்மா அப்பா எங்களுக்கு
அவனே செல்லப் பிள்ளையாம்.




## கடிகாரம்

இர வென்ன பக லென்ன
எப் போதும் இயங் கிடுமே
ஓய் வின்றி உறக்க மின்றி
ஓடி ஓடி உழைத் திடுமே.




# பாடு தமிழ்

பாப்பா பாப்பா நீபாடு
பாடிப் பாடி நீயாடு
சிந்தை மகிழ இசையோடு
சித்திரப் பூவே தமிழ்பாடு.



# கோழிக்குஞ்சு

பஞ்சு போல மென்மையாம்
பந்து போலும் இருக்குமாம்
கையில் எடுத்துப் பாருமே
கோழிக் குஞ்சு தானதே.




## பசு

பசுவே பசுவே வருவாயா
பாலும் எமக்குத் தருவாயா
கன்றும் குடித்த பின்னரே
கனிவாய் எமக்கும் தருவாயா.




# ஆட்டுக்குட்டி

ஆட்டுக் குட்டி ஆட்டுக்குட்டி
அருமையான ஆட்டுக்குட்டி
தேடிப் புல்லை மேய்வாயே
ஓடிநீயும் வருவாயே.




# நாய்க்குட்டி

நல்ல வெள்ளை நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி
வாலை ஆட்டிக் கதைபேசும்
வடிவு மிக்க நாய்க்குட்டி.



# பூனைக்குட்டி

மியா மியா பூனைக்குட்டி
மீசைக்காரப் பூனைக்குட்டி
எலி பிடிக்கும் பூனைக்குட்டி
எந்தன் செல்லப் பூனைக்குட்டி.



# முயல் குட்டி

துள்ளித் துள்ளிப் பாய்ந்திடும்
வெள்ளை முயல் குட்டியே
பவளம் போன்ற கண்களை
பார்க்கப் பார்க்க ஆசையே.



## பூக்கள்

சின்னச் சின்னப் பூக்கள்
சிரிக்கும் அழகைப் பாரு
வண்ண வண்ண நிறங்கள்
கண்ணுக்கு இனிமை தானே.



# வண்ணத்துப்பூச்சி

வண்ணத்துப் பூச்சி வண்ணத்துப்பூச்சி
வண்ணம் பலவும் மின்னும்பூச்சி
பூக்களில் தேனைக் குடிப்பாயே
பறந்து மகிழ்வாய்ச் செல்வாயே.



# ரோசா

அழகிய சிவப்பு ரோசாவே
எனக்குப் பிடித்த மலர்நீயே
மலரே உன்னைப் பறித்திட்டால்
முள்ளும் என்னைக் குத்திடுமோ.




# பூந்தோட்டம்

எங்கள் வீட்டுப் பூந்தோட்டம்
எங்கும் நிறைய மலர்க்கூட்டம்
எட்டிக் கொஞ்சம் பாருங்கள்
எங்கும் வீசும் பூவாசம்.



## காகம்

கா... கா... என்றே கரைந்திடுவாய்
காலையில் எம்மை எழுப்பிடுவாய்
கூட்டம் சேர்த்தே உணவுதனை
கூடி உண்பாய் அழகாக.



# கிளி

கிளியே கிளியே கதை பேசு
கேட்க இனிக்கும் கதை பேசு
பவள வாயால் கதை சொன்னால்
பழங்கள் நிறைய நான் தருவேன்.



# மயில்

மயிலே மயிலே நீயாடு
மேகம் கறுக்குது மகிழ்ந்தாடு
வண்ணத் தோகை விரித்தாடு
வடிவை நானும் இரசிப்பேனே.




# புறா

சின்னச் சின்னப் புறாக்களே
செல்ல நடைப் புறாக்களே
அருகே நானும் வந்தாலே
எழுந்து ஏனோ பறக்கிறீர்.



## குயில்

குக்கூ... குக்கூ... குயிலம்மா
கறுப்பு அழகி நீயம்மா
காதில் தேனும் பாயுதே
கானம் நீயும் பாடவே.



## சேவல்

சேவல் நல்ல சேவல்
சிவப்புக் கொண்டைச் சேவல்
ஆசை யோடு நாங்கள்
அன்பாய் வளர்க்கும் சேவல்.



# சின்னக் குருவி

சின்னச் சின்னக் குருவி
சிறிய சிட்டுக் குருவி
வண்ண வண்ணக் குருவி
வானில் பறக்கும் குருவி.



# புள்ளிமான்

புள்ளிப் புள்ளி மானே
துள்ளி எங்கே போகிறாய்
கிட்ட நீயும் வாராயோ
குட்டிக் கதைகள் பேசவே.



# குரங்கு

குட்டிக் கரணம் போடுது
குதித்துத் தாவி மகிழுது
கண்ணை உருட்டிப் பார்க்குது
குரங்குப் பிள்ளை தானது.




## பாவை

சின்னச் சின்னப் பாவை
சிரிக்கும் என்னைப் பார்த்து
ரோசா என்ற பேரு
நானே வைத்தேன் பாரு.



# சட்டை

அம்மா தைத்துத் தந்தாவே
அழகிய நல்ல சட்டையே
அணிந்தே நானும் மகிழ்ந்தேனே
அம்மா பார்த்து இரசித்தாவே.



# அப்பிள்

அப்பிள் பழமாம் அப்பிள் பழம்
அழகு மிக்க அப்பிள் பழம்
நான் விரும்பி உண்ணும் பழம்
நல்ல சத்து உள்ள பழம்.



# முறுக்கு

அம்மா சுட்ட முறுக்கு
அருமை யான முறுக்கு
வட்ட மான முறுக்கு
வாயில் போட்டு நொறுக்கு.




# பந்து

வட்ட வட்டப் பந்து
வண்ண வண்ணப் பந்து
அடித்து விளை யாட
அப்பா வாங்கித் தந்தார்.



# புத்தகம்

புத்தகம் நல்ல புத்தகம்
புத்தம் புதிய புத்தகம்
படித்து நாமும் உயர்ந்திட
பாதை காட்டும் புத்தகம்.



# சூரியன்

சூரியரே சூரியரே
நீரெழுந்து வாரும்
நீரெழுந்த பின்தானே
ஊர்விழித்துக் கொள்ளும்.



# அழகு நிலா

எங்கள் வீட்டு முற்றத்திலே
எறிக்கும் அழகு நிலவைப்பார்
தென்னங் கீற்றின் இடையினிலே
தெரியும் அழகு நிலாவைப்பார்.



# கடல்

நீலக் கடலின் அழகைப்பார்
நெளிந்து செல்லும் அலைகள்பார்
வானம் கடலைத் தொடுவதுபோல்
வண்ணம் காட்டும் அழகைப்பார்.



# காற்று

மெல்லச் சென்றால் தென்றலாம்
மோதிச் சுழன்றால் புயலாகும்
உயிர்கள் வாழ மூச்சாகும்
அதுவே வீசும் காற்றாகும்.



# பூமி

பந்து போல உருண்டையாம்
பார்க்க அழகாய் இருக்குமாம்
ஆறும் கடலும் மலையுமாய்
அழகு மிக்க பூமியாம்.



# வானவில்

வான வில்லாம் வானவில்
வர்ணம் ஏழு எண்ணிப்பார்
பாதி வட்டம் போலது
பார்க்க அழகாய் இருக்குமே.



# மழை

மழையே மழையே நிறையப்பெய்
மண்ணில் வெள்ளம் ஓடப்பெய்
வெள்ளம் கண்டால் போதுமே
விரைவாய் கப்பல் விடுவோமே.



# பனிப்பூக்கள்

பார்க்கும் இடம் எங்கணும்
பறந்து பறந்து சிரிக்குது
வானில் பூத்துச் சொரிந்திடும்
வண்ணப் பனிப் பூக்களே.




## ஊஞ்சல்

ஊஞ்சல் ஏறி ஆடுவோம்
உந்தி உந்தி ஆடுவோம்
உயர உயரச் செல்லுவோம்
உள்ளம் மகிழ்ச்சி கொள்ளுவோம்.



# பள்ளி செல்வோம்

பள்ளி செல்வோம் வேகமாய்
பாடம் படிப்போம் ஆசையாய்
துள்ளிப் பாடி ஆடியே
தோழர் நாமும் மகிழ்வோமே.



## ஆசிரியர்

பாடம் சொல்லித் தந்திடுவார்
பாட்டுப் பாடிக் காட்டிடுவார்
அம்மா போலே அணைத்திடுவார்
அவரே எங்கள் ஆசிரியர்.



# பழகு

காலையில் எழுந்திடப் பழகு
கடவுளை வணங்கிடப் பழகு
மாலையில் விளையாடப் பழகு
மற்றவருக்கு உதவிடப் பழகு.



# கற்றிடு

வண்ண வண்ணப் படங்களை
வடிவாய் வரையக் கற்றிடு
எண்ணம் போல வரைந்திட
என்றும் நீயும் பழகிடு.




# கணினி

பாடம் சொல்லித் தந்திடுமாம்
படமும் கீறிக் காட்டிடுமாம்
தட்டித் தட்டிக் கேட்பதை
தந்தே உதவும் கணினியாம்.



# விமானம்

வானத்திலே வருகுது பார்
வட்டம்போட்டுப் பறக்குது பார்
பறவைபோல இருக்குது பார்
பறந்துசெல்லும் விமானம் பார்.



# தொலைபேசி

கிறீங்... கிறீங்... என்றே
கூவி எம்மை அழைக்கும்
எடுத்து எங்கும் பேசலாம்
அதுவே தொலை பேசியாம்.



# தொலைக்காட்சி

சின்னத் திரையில் காட்சிகள்
சிந்தைக்கு இனிய பாடல்கள்
விரும்பும் நல்ல நிகழ்ச்சிகள்
வீட்டில் காட்டும் தொலைக்காட்சி.



# காற்றாடி

வண்ண வண்ணக் காற்றாடி
வானில் பறக்கும் அழகைப்பார்
காற்றில் மெல்ல அசைந்தாடும்
கண்ணுக்கு இனிய காற்றாடி.



# பனைமரம்

பனை மரமாம் பனைமரம்
பாரில் ஒரு நெடுமரம்
கற்பக தருவாய் உரமுடனே
காத்து நிற்கும் எம்மண்ணை.



# செங்கரும்பு

எங்கள் வீட்டு முற்றத்திலே
எழுந்து நிற்குது செங்கரும்பு
எவர்க்கும் ஆசை பெருகிடுமே
இனிய கரும்பைச் சுவைத்திடவே.



# வண்ணப் பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வகை வகையாய்ப் பூக்கள்
எண்ண முடிய வில்லை
எங்கும் நிறையப் பூக்கள்.



# ‘பிசா’க் கோபுரம்

இத்தாலி நாட்டில் உள்ளதுவாம்
அழகிய சாய்ந்த கோபுரமாம்
அதிசயம் ஏழில் ஒன்றாகும்
அதுவே “பிசா”க் கோபுரமாம்.



## ‘ஈபிள்’ கோபுரம்

உலக மக்களைக் கவர்ந்திடும்
உயர்ந்த அதிசயக் கோபுரம்
பாரிஸ் நகரில் உள்ளதுவாம்
பாரும் “ஈபிள்” கோபுரமே.



# நம்பிக்கை

சின்னச் சின்னக் கைகளில்தான்
சுழன்று வரும் உலகமப்பா
நெஞ்சில் உரம் கொண்டிருந்தால்
நொருங்கி விழும் துயர்களப்பா.



# பாடி மகிழ்வோம்

மழலைப் பாடல் பாடிடுவோம்
மகிழ்ந்து நாமும் ஆடிடுவோம்
இசையும் அசைவும் இணைந்திடவே
இனிதாய்ப் பாடி மகிழ்ந்திடுவோம்,

அமுதைப் போல இனித்திடும்
அழகுப் பாடல் நூலிது
மழலைத் தமிழில் ஆனது
மகிழ்ந்து நாமும் பாடிடுவோம்.

# செந்தமிழ்
# மழலைப் பாடல்கள்



பத்மா இளங்கோவன்

பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் பத்மா இளங்கோவன் இலங்கையைப் பிறப்பிடமாக கொண்டவர். கல்லூரிக் காலம் முதல் எழுத்துத்துறையில் ஈடுபட்டு வருபவர்.

தாயகத்திலும், ஐரோப்பாவிலும் வெளிவந்த - வெளிவருகின்ற பத்திரிகை, சஞ்சிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சிகளிலும் இவரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன.

பாலர் பாடல்கள் அடங்கிய சில நூல்களை இவர் வெளியிட்டதோடு, ‘பரிசு’ என்ற பெயரில் சிறுவர்க்கான சஞ்சிகையொன்றையும் பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளியிட்டுவந்துள்ளார்.

தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி இலக்கிய அறக்கட்டளையின் சிறுவர் இலக்கியத்திற்கான விருதினையும் (2012) பெற்றவர்.

₹ 100/-

ISBN : 978-93-83051-27-4

9 789383 051274

UMi Unique Media Integrators
The Ultimate
No.8, 6th Cross, 8th Main Road, Vaishnavi Nagar, Thirumullaivoyal,
Chennai-600 109. E-mail: umi.infobooks@gmail.com